# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 36/மா/2023**
**நாள் : 27.03.2023**

திருமதி. எஸ். தமிழரசி,
சென்னை– 91. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம்–14, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், 6வது குறுக்குத் தெரு, ராம் நகர் தெற்கு, மனை எண்.3015-A, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. எஸ். தமிழரசி என்பவரின் 19.01.2023 நாளிட்ட மனு 24.01.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 36/மா/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவுசெய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, மடிப்பாக்கம், 6வது குறுக்குத் தெரு, ராம் நகர் தெற்கு, மனை எண்.3015-A, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. எஸ். தமிழரசி என்பவரின் 19.01.2023 நாளிட்ட மனுவில்,

"(A) The Respondents Zonal Officer, E.E., AE are the officials of Greater Chennai Corporation occupying most important and powerful positions in Zone XIV of the Greater Chennai Corporation,having their legitimate duties to discharge all their activities for the welfare of the Public and to protect the interest of the Greater Chennai Corporation at all circumstances.

(B) But the Respondents were colluded with private persons and Respondent Tahsildar, Sholinganallur Tk., Chennai abrogated the 30 feet Ram Nagar South 6th Cross Street at the Northern End connecting the 30 feet Ram Nagar 4th Main Road on the Western side and the 20 feet Ram Nagar 4th Main Road on the Eastern side and thereby committed offence under Sections 201, 409, 465, 468 and 471 of the IPC read with Section7, 13(2) read with 13(1)(d) of Prevention of Corruption Act, 1988, securing unlawful

enrichment over several crores (as under Section 2(4) of the Tamil Nadu Local Bodies Ombudsman Act 2014).

(C) The E.E., GCC, Zone-XIV has filed a factual report based on the false Report of Tahsildar, Sholinganallur, without application of mind that the issue raised by the Petitioner is NOT relating to "Muthamizh Vidhya Nagar" but relating to Ram Nagar South 6th Cross Street.

(D) It is admittedly an approved Layout and the Ram Nagar, South 6th Cross Street is "not a dead end" and connected at the Northern end with the 4th Main Road, on the eastern and Western side, according to the Factual Report submitted by the Executive Engineer before the High Court, Madras in W.P.No.17970 of 2019 dated 10.07.2019.
Hence, the Respondent Zonal Officer XIV, GCC, is also held responsible "for filing a false report" before the Court and thereby derelicted in his duties and protected ie. Respondents of XIV Zone, GCC with a malafide intention apparently for extraneous considerations.

(E) The Vigilance Officer of the Greater Chennai Corporation, though not directly involved in this transaction but failed to act upon the Petitions submitted to him directly and thereby the Vigilance Officer of the Greater Chennai Corporation has personally benefitted presumably protecting the Accused Officers, in an unfair manner.

(F) The Tahsildar, Sholinganallur Taluk, Chennai District have deliberately issued a misleading report to the Zone XIV of GCC as requested by them, which is a part of their conspiracy, suppressing the fact regarding the encroachment made by the private party on the Road leading to the Ram Nagar South 6th Cross Street from the Muthamizh Vidhya Nagar 24 Feet Road.

(G) But the Tahsildar, Sholinganallur has specifically mentioned in his earlier report dated 06.02.2020, which is simply repeated in the report furnished by the Tahsildar, Sholinganallur dated 15.07.2022 knowing pretty well that the issue is not relating to Muthamizh Vidhya Nagar 24 feet main road, which is connected on the Northern end with 60 feet Bazaar Road but relating to the sanctioned Road on the Southern side with the 20 feet Ram Nagar 4th Main Road and 30 feet Ram Nagar 6th Cross Street on the Western side, which is the approach Road for Plots 8 and 9 of Muthamizh Vidhya Nagar.

(H) The Tahsildar, Sholinganallur Taluk, in connivance with the other Respondents and the Private party has deliberately suppressed the fact that the connecting Road on the Southern side namely the Ram Nagar South 20 feet 4th Main Road and the Ram Nagar South 30 feet 6th Cross Street on the Western side both "are missing" and that has been encroached by the plot owners of Plot No.7, 8 and 9 of Muthamizh Vidhya Nagar.

(I) This fact has been suppressed in the report submitted both by the Thiru. A. Prabhakaran, Tahsildar and also Thiru. S. Arun, Tahsildar Even though this matter has been brought to the knowledge of the Chennai District Collector and the Chennai District Collector has directed the Tahsildar to verify the fact and sent a report to the Petitioner. But the Tahsildar and the Assistant Engineer of Zone XIV have never called upon the Petitioner or her Counsel during the inspection which clearly proves the malafide intention and the conspiracy with the Zone XIV of GCC apparently for huge extraneous considerations.

(J) The Tahsildar, Sholinganallur officials Zone XIV of GCC have facilitated the in this matter by giving a vague report and thereby cheated the Madras High Court stating that as if there is no encroachment on the land in S.No.99 Muthamizh Vidhya Nagar without making any reference with regard to the Ram Nagar South 6th Cross Street or the Ram Nagar South 4th Main Road, inspite of the fact that the approved plan of the Chennai Metropolitan Development Authority issued to the approved layout of Muthamizh Vidhya Nagar clearly shows that there is a Road on the Southern side of Muthamizh Vidhya Nagar running from Ram Nagar 6th Cross Street horizontally connected the 24 feet Muthamizh Vidhya Nagar Road and the most important fact they deliberately failed to consider is that for Plot No.8 and 9 of Muthamizh Vidhya Nagar approach is the Ram Nagar South 30 feet 6th Cross Street only as per the CMDA approved Layout.

(K) The Tahsildar, Sholinganallur having colluded with other officials of Zone XIV of GCC and the Private Party, have not even verified the documents of the Plot owners 7, 8, 9 of Muthamizh Vidhya Nagar, which proves their culpability beyond doubts.

Hence all these officials conspired together and acted illegally for unlawful enrichement and therefore the Tamil Nadu Local Bodies Ombudsman shall initiate appropriate proceedings against all these officials both belongs to Greater Chennai Corporation and the Government Revenue Department for permitting a private party to abrogate the Corporation Public Road worth about Rs.7 Crores, purely for their personal benefits, which is impermissible both under the Tamil Nadu Government Servants Conduct Rules and also the Chennai Corporation Servants Conduct Rules, 1968. contrary to the Records available in the file and also produced by the Petitioner and thereby they are punishable under Section 201, 409, 465, 467, 468, 471 of IPC read with Section 7, 13 (2) read with 13(1)(d) of Prevention of Corruption Act, 1988 and has requested this Forum.

(1) To file an FIR against the above erred officials to punish under the IPC and also under the Prevention of Corruption Act, 1988.

(2) To retrieve the missing Road of Ram Nagar South Cross Street on the Northern and connecting the Ram Nagar 4th Main Road both on the Eastern side and also on the Western side, from the clutches of the Respondents and the third parties.

(3) All the Accused Officers are to be dealt with under Sections 201, 409, 465, 467, 468, 471 of IPC for committing the criminal offence, cheating the Court and thereby personally benefitted to tune of several Crores.

(4) The Accused Officers should be punished by prosecuting them under the provisions of the Prevention of Corruption Act, 1988 since all the above Corporation and Government employees having nexus with a private party and thereby illegally gifted the Public Road worth about 7 Crores and also deliberately filing a false statement before the Hon'ble High Court, Madras, by creating a vague and misleading report in collusion with the Tahsildar, Sholinganallur knowing pretty well that the Layout is approved by the CMDA and the approved layout copy is very well available with the Zonal Officer, Zone XIV of Greater Chennai Corporation and also furnished by the Petitioner to the Respondents while submitting the representations.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.02.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 16.02.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 21.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ராம்நகர் தெற்கு மனைப்பிரிவு MMDAவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒன்று. அதில் ராம்நகர் 6வது குறுக்கு தெருவானது வடபுறத்தில், 4வது பிரதான சாலையுடன் கிழக்கிலும், மேற்கிலும் இணைக்கப்பட்ட தெரு ஆகும். இதனை சென்னை பெருநகர மாநகராட்சியின் 14வது மண்டல செயற் பொறியாளர் தனது 10.07.219 நாளிட்ட அறிக்கையில் உறுதி செய்து உள்ளார்.

ராம் நகர், தெற்கு மனைப்பிரிவில் "சினிமா அரங்கம்" என்ற பொது உபயோகத்திற்காக விடப்பட்ட இடத்தை MMDA வீட்டு மனைகளாக ஒப்புதல் எண்.123/90ல் ஒப்பளித்து உள்ளது. இந்த மனைப்பிரிவில் உள்ள ஒரே தெரு (298'நீளம் 24 அடி அகலம் கொண்டது) தானப் பத்திரம் 1097 நாள்:30.03.1990ல், ஆலந்தூர் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து சிட்லபாக்கம், St. தாமஸ் மவுண்ட் பஞ்சாயத்து அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

- முத்தமிழ் வித்யாநகர், சர்வே எண். 99ல் உள்ளது இந்த அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவில் உள்ள மனை எண்.7,8,9, ஆகியவற்றிற்கு அணுகு சாலையே ராம்நகர் 6வது குறுக்கு தெரு தான் என்பது தெளிவு.
- ராம் நகர் தெற்கு 6வது குறுக்கு தெருவை காணவில்லை என்ற அடிப்படையில் அதனை 3ம் நபர் திரு. A. வெங்கடேசன் என்பரையும் உள்ளடக்கி தான் ரிட் மனு 2330/2020 சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.
- அதில் சோழிங்கநல்லூர் தாலுகா வட்டாட்சியர் 06.02.2020 நாளிட்டு அளித்த கடிதத்தில் புல எண்.99ல் உள்ள சாலைகளை கிராம கணக்கில் உள்ள புலம்படச் சுவடியில் உள்ளப்படி அளந்ததில், சாலைகளில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை" என்று தெரிவித்த காரணத்தால், சென்னை உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் தனது 15.09.2020 நாளிட்ட தீர்ப்பில், "CMDAவின் ஒப்புதல் பெற்ற மனைப் பிரிவு படம், வட்டாட்சியரின் அறிக்கை மற்றும் மனுதாரரின் விண்ணப்பம் ஆகியவற்றின் மீது உரிய நடவடிக்கை

எடுத்து 12 வார காலத்திற்குள் பொதுப் பாதையை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்று ஆணையிடப்பட்டது.

- பிரதிவாதிகள் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு 436/2022 தாக்கல் செய்யப்பட்டது. மாநகராட்சி மீண்டும் ஒரு பொய்யான அறிக்கையை வட்டாட்சியர் அறிக்கையின் அடிப்படையில் தாக்கல் செய்தநிலையில்,
- முதன்மை அமர்வில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தொடர வேண்டாம் எனவும், "Keeping the issue open, giving liberly to the petitioner to launch a fresh litigation" என்றும் ஆணையிடப்பட்டது.

அதன் அடிப்படையில், ரிட்மனு 28681/2022 தாக்கல் செய்யப்பட்டு, 16.02.2023 அன்று 2 வாரங்களில் "Factual Report may be submitted by the Corporation" என்று ஆணையிடப்பட்டது. மேலே கூறப்பட்ட ரிட் மனுக்கள் அனைத்தும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதனை நீக்கம் செய்யவேண்டும் என்பது பற்றியது.

நான் தங்கள் முன் சமர்ப்பித்துள்ள மனுவானது: குற்றம் சாட்டப்பட்டுள்ள 5 மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் 2 வட்டாட்சியர்களும் கூட்டு சதி செய்து, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, தானப் பத்திரம் மூலம் சாலை என ஒப்பளிக்கப்பட்ட, ராம்நகர் தெற்கு 6வது குறுக்கு தெருவை திரு.A. வெங்கடேசன் என்பவருடன் சேர்ந்து பணப்பயன் அடைந்தனர் என்ற குற்றச்சாட்டை முகாந்திரம் உள்ளது என்ற நிலைப்பாட்டினை அணுகிட இயலுமேயானால், இந்த 7 நபர்கள் மீதும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின்படி கிரிமினல் நடவடிக்கை எடுக்க, முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்திடவும், உடனடியாக தற்காலிகப் பணி நீக்கம் செய்திடவும் உத்திரவிட வேண்டும் என்பது தான் இவர்கள் இந்த தேவையற்று, குற்றம் சாட்டப்பட்ட நபர்களில் 6 மற்றும் 7 நபர்கள் அளித்த பொய்யான, திரிக்கப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் சுமார் 7 கோடி மதிப்புள்ள சாலையை, தனி நபரிடம் விட்டு, பணப்பயன் அடைந்துள்ளனர் என்பதனால், நீதிமன்றத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றும் வழக்கிற்கும் இந்த மனுவிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்கின்ற உறுதிப்பாட்டையும் அளித்து, என் மனு மீதான அடிப்படை முகாந்திரமான (Prima facie evidence) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் சாலை என்று ஒப்பளிக்கப்பட்ட சுமார் 7 கோடி மதிப்புள்ள சாலையை, அதுவும் மாநகரின் முக்கிய பகுதியில் உள்ளதனை, "காணவில்லை" என்று சொல்வதை ஏற்க இயலாது என்ற காரணத்தால், என் மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுத்து 1 முதல் 7 வரையிலான குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்களை இம்முறைமன்றம் தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இம்முறைமன்றத்தின் முன் அளித்துள்ள 19.01.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள அனைத்து விவரங்களையும் எனது கூடுதல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளவும், இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் 15.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.**

"சென்னை மடிப்பாக்கம் ராம் நகரில் உள்ள 6வது குறுக்குத் தெரு, 4வது பிரதான சாலையுடன் இணையும் பகுதியில் சாலை ஆக்கிரமிப்பு குறித்து மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்தவாறு மேற்கண்ட

ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாகக் கூறப்படும் இடம் CMDA-ல் இருந்து பெறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின்படி அங்குள்ள 4வது தெருவை இணைத்து செல்கிறது. மாறாக அச்சாலை Dead end சாலையாக உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட இடம் குறித்து வட்டாட்சியரிடம் மேற்கண்ட இடத்தை அளவீடு செய்யுமாறு கோரப்பட்டு, வருவாய் துறையினர் அங்கு ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என தெரிவித்துள்ளனர். மேலும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் தனது 12.7.2022 நாளிட்ட அறிக்கையில் அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவின்படி (approved layout) நகல் மாநகராட்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு குறித்து மேற்கண்ட மனுதாரர் சென்னை உயர்நீதி மன்றத்தில் புதிய வழக்கு ஒன்றை தொடர்ந்துள்ளார் எனவும் அவ்வழக்கிற்கான எதிர் வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து இவற்றின் நகல்களை இன்னும் ஒரிரு தினங்களில் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக இம்முறை மன்றத்தில் மண்டலம் 14ன் செயற்பொறியாளரின் 21.2.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மண்டலம் -14ன் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர், தான் வசிக்கும் சென்னை, மடிப்பாக்கம், 6வது குறுக்கு தெரு, ராம் நகர் தெற்கு மனை பிரிவு, பெருநகர சென்னை வளர்ச்சிக் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு என்றும், மடிப்பாக்கம், முத்தமிழ் நகரை இணைக்கும் ராம் நகரின் 6வது குறுக்கு தெரு மற்றும் நான்காவது பிரதான சாலை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது எனவும் அதனை மீட்குமாறு தன்னுடைய மனுவில் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -14ன் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் மனுதாரர் இந்நேர்வு தொடர்பாக ஏற்கனவே, மாண்பமை உயர் நீதிமன்றத்தில் புதிய வழக்கு ஒன்றை தொடர்ந்துள்ளார் எனவும், இவ்வழக்கிற்கான எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தாக்கல் செய்த வழக்கு எண்.WP 28681/22ற்குரிய மனுதாரரின் ஆணை உறுதி ஆவணமும் (affidavit) மாண்பமை உயர்நீதிமன்றம் 16.2.2023 நாளிட்ட இடைக்கால உத்தரவு நகல் மற்றும் எதிர்மனுதாரராகிய பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் செயற்பொறியாளர் இவ்வழக்கு தொடர்பாக மாண்பமை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்த 13.3.2023 நாளிட்ட Status Report ஆகியவற்றின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014ல்,

பிரிவு 10 (3) The Ombudsman shall not enquiry, into matters relating to ----

(a) x x x

(b) any matter in respect of which an enquiry has been ordered under the the commission of Inquiries Act 1952 or any matter pending before a court.

(c) x x x
என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நிலையில் இந்நேர்வு தொடர்பாக மனுதாரர் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு WP 28681/ 22 நிலுவையில் உள்ளதால் 2014ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் பிரிவு 10 (3) (b) பிரிவின்படி மனுதாரர் திருமதி. எஸ். தமிழரசி 19.1.2023 நாளிட்டு அளித்துள்ள புகார் மனு மீது ஆணை பிறப்பிக்கும் நிலை எழவில்லை என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திருமதி. தமிழரசி,
   கதவு எண்.7, மகாலட்சுமி நகர்,
   8வது குறுக்குத் தெரு,
   ஆதம்பாக்கம், சென்னை – 600 088.
2. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை,
   சென்னை – 600 003.
3. துணை ஆணையர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி, (பணிகள்)
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. மண்டல அலுவலர்,
   மண்டலம்-14, பெருநகர சென்னை மாநகராட்சி,
   6/64, புழுதிவாக்கம் மெயின் ரோடு,
   சென்னை – 600 091.
5. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

28/3/23

செயலாளர்